RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt224s2139

# சங்க கால உழவுத் தொழில்

**இரா. காமாட்சி** [அ, *]

[அ] தமிழ்த்துறை, பி.ஜி.பி கலை மற்றும் அறிவியல் கல்லூரி, நாமக்கல்-637207, தமிழ்நாடு, இந்தியா.

# Plowing During the Sangam Period

**R. Kamatchi** [a, *]

[a] Department of Tamil, PGP College of Arts and Science, Namakkal-637207, Tamil Nadu, India

* Corresponding Author:
kamatchiraman9781@gmail.com

Received: 27-08-2022
Revised: 05-10-2022
Accepted: 08-10-2022
Published: 15-11-2022

Check for updates

## ABSTRACT

In ancient days the word labour is connected both with life and land. They believed that their life will be based on the land which they live. They had the best policy. The first grammar book in Tamil is Tolkappiyam and it not only lays down the rules for grammar in writing and speaking but it also tells people how to lead a better life in accordance with nature. Through this text we come to know know that during the Sangam period all industries were based on five types of landforms. All the industries related to life are food production industry and material production industry. Apart from these, other industries also existed in ancient times. Valluvar's in his poem states that there is no world for those who do not have material things. Material is essential for life. The production, accumulation and distribution of goods depends on the economic system of a society. Economy deals with the production that take place in a country and trading the left over to other countries

**Keywords:** Labour, Land, Life, Society

## முன்னுரை

சங்க காலத்தில் தமிழர்கள் மேற்கொண்ட பண்பாட்டுத் தொழில்கள் அனைத்தும் ஐவகை நிலத்தைச் சார்ந்தே அமைந்துள்ளன. இதனை நிலம் சார் தொழில்கள் என்றும் கூறுவர். குறிஞ்சி மலையும் மலை சார்ந்த பகுதியாகும். குறிஞ்சி நில மக்கள் மலைச்சரிவுப் பகுதிகளையும், மலை மீது உள்ள சமநிலப் பகுதிகளையும், விளைநிலமாக்கி, நெல், தினை முதலிய தானியங்களையும் விளைவித்தும், தினைப்புனம் காத்தல், தேன் எடுத்தல், கிழங்கு அகழ்தல், வேட்டையாடுதல் போன்ற தொழில்களிலும் ஈடுபட்டுள்ளனர். மருத நிலப்பகுதியைச் சார்ந்த மக்கள் வயலை உழுதல், நெல் விதைத்தல், நாற்று நடுதல், களை எடுத்தல், நீர் பாய்ச்சுதல், அறுவடை செய்தல், கடாவிடுதல் முதலிய வேளாண் தொழில்களை மேற்கொண்டுள்ளனர். வயலும் வயல் சார்ந்த இடமும் மருத நிலமாகும். நீர்வளம் நிறைந்த பகுதியாகும் (Senthuraimuthu, 1985).

நெய்தல் நிலம் என்பது கடலும் கடல் சார்ந்த இடமாகும். நெய்தல் நில மக்கள் மீன் பிடித்தல், உப்பு விளைத்தல், மீன் விற்றல் போன்ற தொழில்களை மேற்கொண்டுள்ளனர். காடும், காடு சார்ந்த முல்லை நில மக்கள் சாமை, வரகு போன்ற தானியங்களை விளைத்தல், கால்நடை பராமரிப்பு, பால், தயிர், மோர், வெண்ணெய், நெய் இவற்றை விற்றல் முதலிய தொழில்களில் ஈடுபட்டுள்ளனர் (Subramaniyan, 2010).

ஐவகை நிலமக்களும் தங்களுக்குரிய பொருட்களை உற்பத்தி செய்தும், பிற நிலத்தில் விளைந்த பொருட்களை தான் பெற்றும் பண்டமாற்று முறையினை மேற்கொண்டு வாழ்ந்து வந்து உள்ளனர்.

ஒவ்வொரு நிலத்திலும், அவர்களின் சூழ்நிலைக்கேற்ப தொழில்களும் அமைந்து இருந்தன என்பது குறிப்பிடத்தக்கதாகும் (Ramanathan, 2002).

## உழவுத்தொழில்

தமிழகத்தின் மிகச் சிறந்த தொழிலாக விளங்கியது உழவுத் தொழிலேயாகும். உழவும் ஏனைய தொழில்களும் இல்லை எனில் உலகம் இல்லை. உலகத்திற்கு மிக அடிப்படையானது உழவுத்தொழில். சங்க காலம் முதல் வேளாண்மைத் தொழில் தமிழரது தொழிலாக இருந்துள்ளமைக்குத் தொல்காப்பியம் சான்றாக அமைந்துள்ளது. தொல்காப்பியர் உழவர்களை,

"வேளாண் மாந்தர் உழுதூண் அல்லது

இல்லென மொழிய பிறவகை நிகழ்ச்சி"

என்ற நூற்பாவில் வேளாண் மாந்தர் என்று குறிப்பிட்டுள்ளார். உழவுத் தொழிலினை வேளாண்மை என்ற சொல்லால் வழங்கியுள்ளனர் (Jagadesan, 2012). மண்ணை ஆளும் தன்மையுடைய தொழிலாகிய பயிர்த்தொழிலைக் குறிப்பதாக 'வேளாண்மை' என்ற சொல் பயன்பட்டு வந்துள்ளது. தில்லைநாயகம் "நிலம் திருத்தி, பயிர் செய்து, பலன் கண்டு, தானும் பயன்படுத்தி, தன்னைச் சுற்றியுள்ளவர்களையும் ஓம்பும் முறைதான் வேளாண்மை" என்று வேளாண் தொழில் முறையையும், பயனையும் எடுத்துரைக்கின்றார் (Jagadesan, 2012).

செந்துறைமுத்து, தமது 'ஏர்க்களமும், போர்க்களமும்' என்ற நூலில் "நிலத்தை நன்றாக உழுது புழுதியாக்கி, நீர் பாய்ச்சி, நெல் முதலிய உணவுப் பொருட்களை விளைவிக்கும் பயிர்த்தொழிலையே 'உழவுத்தொழில்' எனவும், 'ஏர்த்தொழில்' எனவும், 'வேளாண்மைத் தொழில்' எனவும் கூறுவர்" என்று வேளாண் தொழிலின் தன்மையை எடுத்துரைத்துள்ளார். வேளாண்மை என்னும் சொல்லாட்சியின் விளக்கம் குறித்து, அறிஞர்களின் கூற்றினால் அறிந்து கொள்ளலாம். உலகத்தில் என்றும் அழியாது நிலைபெற்று இருக்கக் கூடிய சிறந்த தொழில் வேளாண்மை ஒன்றேயாகும். மக்கள் எத்தொழிலைச் செய்து பொருள் ஈட்டினாலும், உணவின் பொருட்டு உழவரிடமே செல்பவராக இருந்துள்ளனர். இச்சிறப்பு கருதியே,

"சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் அதனால்

உழந்தும் உழவே தலை"

என்ற திருக்குறளில் வள்ளுவர் உழவர்தம் செயலினைச் சிறப்பித்துக் கூறியுள்ளார் (Jagadesan, 2012)..

## வேளாண்மை

ஒரு நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கு உழவுத்தொழில் முக்கிய பங்கு வகிக்கின்றது. உழவுத்தொழில் உலகத்துத் தொழில்களில் தலைச்சிறந்த தொழிலாகும். நிலமும், நீரும் சிறந்த முறையில் இருப்பின் வேளாண்மை மேன்மையடையும். உழவுத்தொழில் உடலை வருத்தி செய்ய வேண்டிய தொழில் என்றாலும், அது மக்களின் உயிர்த்தொழிலாக விளங்கியுள்ளதை அறியலாம்.

## உழுதல்

பயிர் விளைவிப்பதற்கு முதலில் நிலத்தை உழுதல் அவசியமாகும். உழுதல் என்பது நிலத்தைப் பண்படுத்துவதாகும். நிலத்தை ஆழ உழுது பயிர் செய்தால் பயிர்கள் செழித்தும், மிக உறுதியாகவும் வளரும். எனவே நிலத்தை உழுவது முக்கியமான ஒன்றாகும். "உழவு என்பது உழத்தல் என்பதனடியாகத் தோன்றியதாகும். உழத்தல் என்பது இடைவிடாது முயலும் மெய்ம்முயற்சியைக் குறிக்கும். மழை, பனி, வெயில் என்னும் கால வேறுபாட்டால் உடம்புக்கு உளவாகும் தொல்லைகளைச்

சிறிதும் பொருட்படுத்தாது, உழைக்கும் மெய்ம்முயற்சி" என்று செந்துறை முத்து குறிப்பிடுகின்றார். மன்னனின் வெற்றி உழவரின் கலப்பையையே நம்பியிருந்தது. சோழன் கிள்ளி வளவன் பெற்ற வெற்றிகளுக்குக் காரணம் கலப்பையைக் கொண்டு உழுது விளைத்த நெல்தான் என்பதை,

"தரூஉம் கொற்றமும் உழுபடை

ஊன்றுசால் மருங்கின் ஈன்றதன் பயனே"

என்று வெள்ளைக்குடி நாகனார் பாராட்டியுள்ளார் (Jagadesan, 2012).

## நாற்று நடுதல்

நிலத்தை உழுது விதைத்த பின்னர் அந்நிலத்தை மட்டம் செய்தலைப் 'பல்லியாடுதல்' என்பர். நாற்றங்காலில் விதையை விதைத்துப் பின் பறித்து நட்டனர் என்பதனை,

"நீர்உறு செறுவின் நாறுமுடி அழுத்தநின்

நடுநரோடு சேறி ஆயின"

என்று நற்றிணை பாடலடிகளும் உழவர்கள் விதைகளை விதைக்காமல் நாற்றாக வளர்த்துப் பக்குவப்படுத்தி நாற்றாக நட்டதை ஒரு வகையான வழக்கமாக கொண்டு இருந்ததை அறிவுறுத்துகின்றன (Jagadesan, 2012). நாற்று நடுதலில் பெண்கள் ஈடுபட்டுள்ளனர். நாற்று இருந்ததை அறிவுறுத்துகின்றன. நாற்று நடுதலில் பெண்கள் ஈடுபட்டுள்ளனர். நாற்று நடும்போது ஒன்றை ஒன்று நெருங்காமல் நான்கு புறமும் காற்று நாற்றுக்களை ஊடறுத்துச் செல்லுமாறு இடைவெளி தந்து நடவு செய்துள்ளனர். அவ்விடைவெளியினால் பயிர்கள் கிளைத்துச் செழித்துப் பால்கட்டி வளர்ந்தன. நெல்லின் அரிசி முதிர்வதற்கு முன்னர் பால் கட்டி வெண்மை நிறத்தில் இருத்தல் நெல் பருத்திருக்கும் என்பதைக் கண்டறிந்தனர்.

"திருமுருகாற்றுப்படை விவரிக்கும் வேலன் வெறியாடல் விதைப்பிற்கு முந்திய சடங்காகவே தோன்றுகிறது" என்று நா. சுப்பிரமணியன் குறிப்பிடுகின்றார்.

சோழவள நாட்டில் எல்லாக் காலங்களிலும் தவறாது விளைச்சலைத் தரும் கழனிகள் பல இருந்துள்ளன. பச்சைக் கரும்பினுடைய நறுமணம் கமழ்கின்ற பாகு காய்ச்சப்படுகின்ற கரும்பாலைகள் நிறைந்துள்ளன. நெருக்கமான குலைகளையுடைய தென்னை, வாழை, பனை முதலிய மரங்களும் மஞ்சள், சோம்பு, இஞ்சி முதலிய செடிகளும் அடர்ந்து வளர்ந்திருந்தன.

தமிழகத்தில் நிலங்களில் பயிரிடப்படும் முக்கியப் பயிர்களான சோளம், கம்பு, வரகு, திணை நெல் போன்ற தானியப் பயிர்கள் தனிப்பயிராகவும், பச்சைப்பயிறு, கொள்ளு, உளுந்து, அவரை போன்ற பயிர்கள் கலப்புப் பயிராகவும் பயிரிடப்படுகின்றன. தினை, வரகு இவை விளையும் நிலத்தில் கொழுங்கொடி அவரை விதைத்துள்ளனர். இதனை

"இருவி தொறும் குளிர்புரை கொடுங்காய் கொண்டவன அவரை"

என்ற மலைபடுகடாம் பாடல்வரிகள் தெரிவிக்கின்றன (Jagadesan, 2012). பத்துப்பாட்டில் இஞ்சியும், மஞ்சளும் விதைக்கப்பட்டதை,

"இஞ்சி மஞ்சள் பைங்கறி பிறவும்

பல்வேறு தாரமொடு கல்லகத் தீண்டி"

இஞ்சியை மஞ்சளோடு பயிரிட்டு வந்துள்ளனர் (Jagadesan, 2012). இஞ்சியைச் சங்க காலத்திலேயே கிரேக்க உரோம நாடுகளுக்கு ஏற்றுமதியும் செய்துள்ளனர்.

## களை பறித்தல்

நன்கு உழுது, விதைத்த பயிரைக் காப்பதற்கு களையெடுக்கும் பணி மேற்கொள்ளப்படுகின்றது. வயலில் நீரைப் பாய்ச்சி ஈரப்பதம் உள்ளபோது கையாலேயே களையைப் பறித்து விடுகின்றனர்.

நெற்பயிர் உள்ள வயல்களில் வளரும் களைகளை இவ்விதம் நீக்கிவிடுகின்றனர். களைகள் பயிரைத் தாக்குவதோடு பூச்சிகளும், உயிரிகளும் தங்குமிடமாகி விடுகின்றன. எனவே அவற்றைக் கைகளாலும், கருவிகளாலும் நீக்கும் முறையை மக்கள் கடைப்பிடித்துள்ளனர் (Jagadesan, 2012).

"கலைஞர் தந்த கணைக்கால் நெய்தல்"

"பஞ்சாய்க் கோரை பல்லின் சவட்டி"

என்ற வரிகளால் நன்செய் நிலத்தில் களையாக முளைத்திருந்த நெய்தல், கோரை போன்றவற்றை களைந்தெறிந்த செய்தியை பெரும்பாணாற்றுப்படை தெளிவுறுத்துகிறது. "நிலத்தை உழுது பயிரினை நட்டபின், அப்பயிர் வளர்கின்ற பொழுது இயற்கையாலும், பிற உயிரினங்களாலும் உடன் விளைகின்ற உபயோகமற்ற களைகளாலும் ஏற்படும் தீங்கிலிருந்து பாதுகாப்பது அவசியம்" என இராமநாதன் வலியுறுத்துகின்றார் (Jagadesan, 2012).

களை பறிக்கும் கருவி மரத்தால் செய்யப்பட்டிருந்த விதம் பற்றி,

"கோடுடைக் கையர் துளரெறி வினைஞர்"

என்று அகநானூறு குறிப்பிடுகின்றது (Jagadesan, 2012). வயல் பகுதி மற்ற நிலத்தை விட செழிப்பு மிகுந்த நிலமாக இருந்தது. ஆம்பல் முதலிய களைகளைப் பெண்கள் நிலங்களிலிருந்து நீக்கினர் என்ற செய்தியை,

"கொண்டைக் கூழைத் தண் தழைக் கடைசியர்

சிறுமாண் நெய்தல் ஆம்பலொடு கட்கும்"

என்ற புறநானூற்றுப் பாடல் வரிகள் வயல்களில் களை பறித்த தன்மையை புலப்படுத்துகின்றது (Jagadesan, 2012).

## உரம் இடுதல்

வேளாண் நிலத்தில் பயிர்களுக்கு உரம் இடுதல் அவசியமாகும். பயிரின் வளர்ச்சிக்கு உரம் இன்றியமையாததாகும். உழவர்கள் கால்நடைகளின் கழிவுகளாகிய தொழு உரமும், இலை, தழைகளாகிய தழையுரமும் இன்று வரை பயன்படுத்தி வருகின்றனர். மேலும் மண்புழு உரமும், மக்கும் கழிவுகளில் இருந்தும் உரங்களைப் பயன்படுத்துகின்றனர். எரு இடுதல் என்பதில் இயற்கை முறை எருவினை பயன்படுத்திய விதத்தினை அறியலாம். இதனை,

"தாது எரு மறுகின் மூதூர்"

"தாதொரு மறுகு"

எனவரும் எட்டுத்தொகைப் பகுதிகளாலும் அறியலாம் (Jagadesan, 2012). குப்பைக் கூளங்களே எருவாக பயன்படுத்தப்பட்டதை இலக்கியச் சான்றுகளால் அறிய முடிகின்றது.

## நெல் விளைத்தல்

வரப்புகளாக கட்டின வேலி நிலத்தில் ஒரு விதைப்பில் விதைத்த விதை ஆயிரமாக விளைந்திருந்ததனை,

"தொடுப்பின் ஆயிரம் வித்தியது விளைய"

என்ற அடியின் வாயிலாக அறியலாம் (Jagadesan, 2012). குறிஞ்சி நிலத்தில் ஐவன நெல், வெண்ணெல், தோரைநெல் ஆகிய மூவகையான நெற்பயிர்கள் பயிரிடப்பட்டது. பலவகையான நெற்பயிர்களைச் சங்ககால மக்கள் விளைவித்தகுறிப்பிடுவதன் மூலம் பலவகையான நெற்பயிர்களைச் சங்ககால மக்கள் விளைவித்த நிலையை அறியலாம்.

### ஐவன நெல்

குறிஞ்சி நிலத்தில் விளையும் நெல் ஐவன நெல்லாகும். இதனை மலைநெல் என்றும் கூறுவர். ஐவனம் என்ற சொல்லிற்கு மலைநெல் அல்லது காட்டு நெல் என்று அகராதி பொருள் கூறுகின்றது.

"ஐவன வெண்ணெலொடு அரில் கொள்புநீ"

ஐவன வெண்ணெலொடு அரில் என்று மதுரைக்காஞ்சி குறிப்பிடுகிறது (Jagadesan, 2012).

### மூங்கில் நெல்

வெண்மை நிறமுடையது மூங்கில் நெல்லாகும். இதனை தோரை என்றும் அழைப்பர். இதனை,

"குறுங்கதிர் தோரை"

என்று மாங்குடி மருதனார் குறிப்பிடகிறார் (Jagadesan, 2012).

"அவல்பதம் கொண்டன அம்பொதித் தோரை" என பெருங்கௌசிகனாரும் குறிப்பிட்டுள்ளனர். நெல்லைத் தன் அகத்தே கொண்ட மூங்கிலைப் பற்றி,

"நெல்கொள் நெடுவெதிற்கு" என்று குறிப்பிடுகின்றார் (Jagadesan, 2012).

### சாலி நெல்

காவிரி பாயும் சோழ நாட்டில் ஒரு வேலி நிலத்தில் ஆயிரம் கலம் நெல் விளையக் கூடிய சாலி நெல்லை பயிர் செய்வதை பழந்தமிழ் மக்கள் குறிக்கோளாகக் கொண்டிருந்தனர். இச்செய்தி பற்றி,

"சாலி நெல்லின் சிறை கொள் வேலி

ஆயிரம் விளையுட்டு ஆகக்

காவிரி புரக்கும் நாடுகிழ வோனே"

என்ற குறிப்பால் அறியலாம் (Jagadesan, 2012).

### செந்நெல்

செந்நெல்லை மருதநிலக் கழனியில் விளைவித்துள்ளனர். நெல் வகைகளில் சிறந்த நெல் செந்நெல் ஆகும். இந்நெல் பழையதாகும் போது உயர்தரமான நெல்லாகக் கருதப்பட்டு வந்துள்ளது.

### அறுவடை

நெல்லை அறுவடை செய்து அவற்றைப் பாம்புகள் கிடக்கின்ற மருத மரங்களின் நிழலில் அகன்ற இடங்களில் குவித்து வைத்து இருந்தனர். பின்னர் அந்நெற்போர்களினுடைய அடி எடுத்து கடாவி விடுவார்கள். நெல்லின்றும் குற்றமறும்படி வைக்கோலையும், கூளத்தையும் நீக்கி உலர வைத்திருப்பார்கள். உலர்ந்த பிறகு மேல் காற்றிலே தூற்றி நெல்லைக் குவிப்பர். அந்நெற்குவியல் வடதிசையிலுள்ள மேரு மலையினும் சிறப்புற்றுத் தோன்றும். இத்தகு தலையாய தொழில் செய்த உழவர்கள் வளங்கெழுமிய மருதநிலம் சூழ்ந்த அசையாத குடியிருப்புகளில் வாழ்ந்தனர். உழவர் இனத்தைச் சிறப்பித்துக் கூறும் வகையில்,

"தொல்பசி அறியா துளங்கா இருக்கை

மல்லல் பேரூர் மடியின் மடியா

வினைஞர் தந்த வெண்ணெல் வல்சி"

எனவரும் அடிகளில் தொன்றுதொட்டு வறுமையால் வந்த பசி அறியாத நிலையா குடியிருப்பினை உடைய வளப்பமுடைய பெரிய ஊர்களில் வாழ்பவர் என்றும், தம் தொழிலில் சோம்பியிராதவர் உழவர்கள் என்ற கருத்தையும் இதன் மூலம் காணமுடிகிறது. விளைந்த நெற்கதிர்களை அறுப்பதற்கு வளைந்து காணும் அரிவாளைப் பயன்படுத்தியுள்ளனர் (Jagadesan, 2012).

## தினைப் புனம் காத்தல்

குறிஞ்சி நில மக்களின் தொழில் முறைகளில் தினைப்புனம் காத்தலும் ஒன்றாகும். தினைப்புனங்களிடத்தே யானை, புலி முதலிய விலங்குகளாலும், கிளி முதலிய பறவைகளாலும் அழிவு நேராமல் இருப்பதற்கு, மரங்கள் மேல் உயர்ந்த பரண்கள் அமைத்து இருந்தனர். அப்பரண்கள் மலைப்பகுதியில் விளையும் பிரம்புகளால் அமைக்கப்பட்டிருந்ததை கபிலர்,

"சாரல் சூரல் தகைபெற வலந்த"

என்று சுட்டியுள்ளார் (Jagadesan, 2012). இப்பரண்கள் கொடிய விலங்குகளிடம் இருந்து தன்னைக் காத்துக் கொள்ளவும், பகற் பொழுதில் சூரியனின் வெண்மையிலிருந்து காப்பதற்காகவும், பரண்கள் அமைக்கப்பட்டிருந்த செய்தியினை,

"புலி அஞ்சு இதணம் ஏறி"

"உரவுக்கதிர் தெறூஉம் உருப்பு அவிர் அமயத்து"

என்னும் வரிகளால் அறியலாம் (Jagadesan, 2012).. தினைக்கதிர்கள் முற்றி அறுவடைக்குரிய பருவத்தில் கதிர்களைப் பறவைகள் உண்ண வருவதுண்டு. அச்சமயம் பறவைகளால் தீங்கு ஏற்படாதவாறு குறிஞ்சி நிலத்து இளமகளிர் தினைப்புனத்தைக் காவல் காத்த செய்தியினை,

"துய்த்தலை வாங்கிய புனிறுதீர் பெருங்குரல்

நல்கோள் சிறுதினை படுபுள் ஓப்பி"

என்ற அடிகள் மூலம் உணரலாம் (Jagadesan, 2012). தழல், தட்டை, குளிர் ஆகிய கருவிகளைக் கொண்டு அவற்றை எறியும் முறையறிந்தும், ஒலி எழுப்பியும் பறவைகளை (கிளி) விரட்டியுள்ளனர். இதனை,

"தழலுந் தட்டையுங் குளிரும் பிறவும்

கிளிகடி மரபின் ஊழூழ் வாங்கி

உரவுக்கதிர் தெறூஉம"

எனவரும் பாடலடிகள் தினைப்புனம் காத்த செய்தியைக் குறிப்பிடுகிறது. கொடிச்சி, தினையில் படியும் கிளிகளை ஒட்டுவதற்கு இசைத்தலும், விளித்தலும் கருவிகளால் ஒலி எழுப்பியும் மேற்கொண்ட செயல்களை அறியலாம் (Jagadesan, 2012).

## கிழங்கு அகழ்தல்

குறிஞ்சி நிலத்தில் விளையும் பொருள்களுள் ஒன்று கிழங்காகும். கிழங்கானது கொழுவிய கொடியுடன் வளர்ந்திருந்ததை மலைபடுகடாம்,

"கொழுங் கொடிக் கவலை"

என்று குறிப்பிடுவதனால் அறியமுடிகிறது (Jagadesan, 2012)..

### கால்நடை வளர்த்தல்

ஐந்தறிவு விலங்காக இருந்தாலும் மனிதர்களால் மதிக்கப்பெற்று, மனித வாழ்க்கையோடு இணைந்து வாழ்வியலை அமைத்துக் கொண்ட உயிர்கள் கால்நடைகளாகும். மற்ற உயிர்களிடத்தில் அன்பு செலுத்துதலே கடமை என்பதை,

"மன்னுயிர் ஓம்பி அருளாள்வார்க்கு இல்லென்ப

தன்னுயிர் அஞ்சும் வினை."

என வள்ளுவர் கூறியுள்ளார் (Jagadesan, 2012). காடும், காடு சார்ந்த பகுதியும் முல்லை நிலமாகும். நீர்வளமும், நிலவளமும் குறைந்த பகுதியாக இருப்பதால் அங்கு மக்கள் ஆடு, மாடுகளை வளர்க்கும் தொழிலை மேற்கொண்டுள்ளனர். பயிர் விளைவிப்பது மட்டுமின்றி வேளாண் தொழிலில் கால்நடை வளர்த்தலும் குறிப்பிடத்தக்கதாகும். "மக்கள் வலிமையோடு வாழ மண் வளமோடு இருக்க வேண்டும். மண்வளமோடு இருக்க கால்நடைகள் வளமோடு வாழ வேண்டும். ஆக மக்கள் வளமோடு வாழ கால்நடைகள் வளமோடு வளர்க்கப் பெற்றாக வேண்டும்"

மக்கள் கால்நடைகளை பெருஞ்செல்வமாகக் கருதி வளர்த்து வந்துள்ளனர். அக்காலத்தில் கால்நடைகளின் எண்ணிக்கைகளைக் கொண்டு அவர்களது செல்வநிலை கணக்கிடப்பட்டுள்ளது. ஒரு அரசன் பகை அரசன் மீது போர்த்தொடுக்க முயன்றால் அவனது செல்வத்தைக் கவர்ந்து வர விரும்பி பசுக்கள் மீதே நாட்டம் செலுத்திக் கவர்ந்து வந்துள்ளனர். இதனை ஆநிரை கவர்தல் என்னும் புறத்திணைத் துறைகளுள் ஒன்றாக இலக்கண நூலார் குறிப்பிட்டுள்ளனர்.

முல்லை நில மக்களுக்கு மாடுகள் செல்வங்களாகக் கருதப்பட்டமை குறித்து கைலாசபதி அக்காலத்திலே செல்வப் பொருளாக மாடு அமைந்த காரணத்தினாலேயே அது சமுதாயத்தில் போருக்கு காலாயமைந்தது. பசுவைக் கவருவோரும், கவருவோரைத் தடுக்க முனைபவரும், மூர்க்கமான போரில் ஈடுபட்டனர். மாடே செல்வமாகவும், வாழ்க்கைக்கு ஆதாரமாகவும் இருந்ததால் அவற்றைக் காப்போர் தமது உயிரைக் கொடுக்கவும் பின்னிற்கவில்லை" என்று குறிப்பிடுகின்றார். மாடு வளர்ப்பு முறை மக்களின் பொருளாதாரத்தை பெருமளவில் உயர்த்தி உள்ளது. முல்லை நில மக்களின் உணவுத் தேவையை நிறைவு செய்யும் மூலதனமாக கால்நடை வளர்ப்பே திகழ்ந்துள்ளது. பழங்காலத்தில் ஆடு வளர்ப்புத் தொழில் இருந்துள்ளதை,

"நெடுந்தாம்பு தொடுத்த குறுந்தறி முன்றிற்

கொடுமுகத் துருவையொடு வெள்ளை சேக்கும்

இடுமுள் வேலி யெருப்படு வரைப்பின"

என்ற அடிகளில் நீண்ட தாம்புக் கயிற்றால் செம்மறியாடுகளும், வெள்ளாடுகளும் ஆயர் மக்கள் தங்கள் குடில்களில் கட்டியிருந்ததனை அறியலாம் (Jagadesan, 2012).

இடையர் ஆடுகளின் கூட்டத்தை மேய்ச்சல் உள்ள இடம் நோக்கிச் செல்லும் செயலினை,

"ஆடுதலைத் துருவின் தோடுதலைப் பெயர்க்கும்

வன்கை இடையன்"

என்ற பாடல் வரிகளின் மூலம் அறியலாம் (Jagadesan, 2012). இவ்வாறு மக்கள் தம் உடலை வருத்திக் கொண்டு, பொருளாதாரத் தேவைக்காக கால்நடை வளர்ப்புத் தொழிலை மேற்கொண்டுள்ளனர். மலைச்சாரலிடத்து முசுண்டை, எள், தினை, அவரை, வரகு, மூங்கில் நெல், வெண்சிறுகடுகு, இஞ்சி, கவலைக்கிழங்கு, மலைவாழை, பெருமூங்கில் நெல், நாவல், கூவைக்கிழங்கு, தேமா, ஆசினிப்பலா, பலா, ஐவனம், வெண்ணெல், கரும்பு, நெய்தல் முதலான பயிர்களை விளைவித்தும், கால்நடைகளை வளர்த்தும் தங்கள் தொழிலான வேளாண் தொழிலை மேற்கொண்டு பொருளாதாரத்தை உயர்த்தி மகிழ்வோடு வாழ்ந்துள்ளனர்.

## முடிவுரை

ஒரு நாட்டைச் செல்வத்திலும், மதிப்பிலும் சிறப்புற்று விளங்கச் செய்வது தொழில்கள் ஆகும். சங்க கால மக்கள் இயற்கை அமைப்பை அடிப்படையாகக் கொண்டு நிலத்தை சீர் செய்து, உழுது பலவகை உணவுப் பொருட்களை விளைவித்து ஆரோக்கியமான வாழ்வினை வாழ்ந்துள்ளனர். தான் விளைவித்த பண்டங்களைத் தன் தேவைக்கு எஞ்சியது போக பிறருக்கு விற்றும், ஏற்றுமதி செய்தும் தம் தொழிலை நடத்தியுள்ளனர்என்பதை அறியமுடிகிறது.

## References


Jagadesan, R. (2012) Pathupattu, Kurinji Pathippagam, Chennai, India.

Senthuraimuthu, (1985) Ilakkiyathil Erkalamum Poorkalamum, Arunmozhi Pathippagam, Chennai, India.

Subramaniyan, N. (2010) Sangakaala Valviyal, New Century Book House, Chennai, India.

Ramanathan, A. (2002) Maarivarum Samoogam, Thanthanea Pathippagam, Chennai, India.


**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License